மனனம் செய்ய இந்த வார வசனம்:

**தம் சிலுவையைச் சுமக்காமல் என் பின் வருபவர் எனக்குச் சீடராக இருக்கமுடியாது.**

(லூக்: 14:27)

உன்மீது நீ அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக” என்னும் இந்த ஒரே கட்டளையில் அனைத்து திருச்சட்டங்களும் அடங்கியுள்ளது. நம் மீட்பரின் வார்த்தைகளையே பவுல் எதிரொலிக்கின்றார். உன்மீது நீ அன்புகூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக” இவற்றைவிட மேலான கட்டளை வேறு எதுவும் இல்லை (மாற்கு 12:31) சமாரியர்கள் இயேசுவை தங்களின் ஊருக்குள் ஏற்றுக்கொள்ளாததால், யாக்கோபும், யோவானும் இயேசுவிடம் வந்து வானத்திலிருந்து தீ வந்து இவர்களை அழிக்குமாறு செய்யலாமா? இது உமக்கு விருப்பமா? என்று கேட்கிறார்கள். இயேசு அவர்களைக் கடிந்துகொண்டு வேறொரு ஊருக்குச் செல்லுமாறு அவர்களை அழைத்துச்செல்கிறார். சீடர்களைத் தூண்டிவிடவோ, சமாரியரைப் பழிவாங்கவோ சொல்லவில்லை.

நம்மை அன்பு செய்பவர்களை நாமும் அன்பு செய்வது மிகவும் எளிது. அதிலும் நம்மை நாமே அன்பு செய்வது அதனினும் எளிது. அவருடைய வாழ்க்கை கவர்ச்சியானது அல்ல என்று தம்மைப் பின்பற்ற விரும்பிய மனிதரிடம் இயேசு மிகவும் தெளிவாகக் கூறுகிறார். அவரைப் பின்பற்றுபவர்கள் தனிப்பட்ட கவனிப்பையோ அல்லது ஆடம்பரத்தையோ எதிர்பார்க்கக்கூடாது. இரண்டாவது மனிதரிடம் இயேசு கடுமையாகப் பேசியிருக்கலாம். தம்மைப் பின்பற்றவிரும்பும் எவரும் தம் சொந்தத் தேவைகளை விட்டுவிடவேண்டும். இந்த இளைஞன் தம் தந்தை இறக்கும்வரைக் காத்திருந்து அவரை அடக்கம் செய்தபின்னரே, இயேசுவைப் பின்தொடர்வேன் என்று கூறுகிறார். ‘இறந்தவர்கள்’ நம்பிக்கை இல்லாதவர்கள் இதுபோன்ற கடமைகளைக் கவனித்துக்கொள்ளட்டும். ஆனால் ‘உயிரோடு இருப்பவர்கள்’ நம்பிக்கைக் கொண்டோர் தங்களுடைய வாழ்க்கையை தூதுரைப்பதற்கு அர்ப்பணிக்க வேண்டும். மூன்றாவது மனிதனுக்கு, தன்னைப் பின்பற்ற விரும்புபவர் குடும்பக் கவலைகளிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார். இந்த மனிதர்களைப் பற்றி நற்செய்தி வேறெந்த செய்தியையும் மேற்கொண்டு கூறவில்லை. ஏனென்றால் இயேசு சொன்னபடி, அவர்களில் எவராலும் செய்யமுடியவில்லை என்றும் நாம் கருதலாம்.

இயேசு சொன்னதைக் கேட்ட யூதர்கள் இறைவாக்கினர் எலியா, எலிசாவை அழைத்த நிகழ்வையும் எலிசா எலியாவைப் பின்பற்றியதையும் நினைவுகூர்ந்திருப்பர். எலிசா அவருடைய பெற்றோரிடம் விடைபெற்றுவர விரும்பினார். எலிசா அவரிடம் போ, நான் உனக்கு செய்யவேண்டியதை செய்துவிட்டேன் என்று சொல்லியபின் அவர் விடைபெற்றுவருவதை விட்டுவிட்டார். இறைவனின் அழைப்புக்கு முன் தம்முடைய சொந்த விருப்பங்களை அவர் துண்டித்துகொண்டார். இயேசு பேதுரு, அந்த்ரேயா, யாக்கோபு, யோவான் ஆகியோரை அழைத்து, தம்மைப் பின்பற்ற சொன்னதை நாமும் நினைவுகூர்வோம். (மத்: 4: 18-22; மாற்:1:16-20; லூக்: 5: 4-11)

நம்மையேத் துறந்து, நம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு அவரைப் பின்பற்றுவது என்பது எளிதானதல்ல என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால், இதை நாம் முயற்சிசெய்யக்கூடாது என்பது பொருள் அல்ல; இதை முயற்சி செய்துபார்க்க தூய ஆவியானவர் நம்மை வழிநடத்துவாராக. ✣

**இன்றைய வாசகங்கள்:**

1 அரசர்: 19: 16,19-21;
திபா: 16: 1-2, 5, 7-11;
கலாத்தியர்: 5: 1, 13-18;
லூக்: 9: 51-62.

INTERNAL CIRCULATION ONLY
BUL 26/2022
*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

26 ஜூன் 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH **பொதுக்காலம் ஆண்டின் 13 ஆம் ஞாயிறு**

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது**

மாதாந்திர கருப்பொருள்:
**கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழா (ஜூன் 19)**

## நான் உம்மைப் பின்தொடர்வேன், ஆனால்...

நாம் இயேசுவை நம்புகிறோம். அவரில் நம்பிக்கை வைத்துள்ளோம். அவர் விரும்புவதுபோல நம்மால் அவரைப் பின்பற்றமுடியுமா? **சீடத்துவத்தின் விலை என்ன?**

